கனியாமூர் மாணவி உயிரிழந்த வழக்கு

ஜிப்மர் ஆய்வறிக்கை விழுப்புரம் நீதிமன்றத்தில் தாக்கல்

விழுப்புரம்/ கள்ளக்குறிச்சி, ஆக.22: கள்ளக்குறிச்சி மாவட்டம், கனியாமூர் தனியார் பள்ளியில் மாணவி ஸ்ரீமதி உயிரிழந்த வழக்கில் ஜிப்மர் மருத்துவமனையின் ஆய்வறிக்கை விழுப்புரம் நீதிமன்றம் திங்கள்கிழமை தாக்கல் செய்யப்பட்டது. மேலும், அவரது தோழிகள் இருவரின் வாக்குமூலமும் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் அருகே உள்ள கனியாமூர் தனியார் பள்ளியில் பிளஸ் 2 படித்து வந்த, கடலூர் மாவட்டம், வேப்பூரை அடுத்த பெரிய நெசலூர் கிராமத்தைச் சேர்ந்த மாணவி ஸ்ரீமதி, கடந்த மாதம் 13-ஆம் தேதி மர்மமான முறையில் உயிரிழந்தார். இந்த வழக்கை சிபிசிஐடி போலீஸார் விசாரித்து வருகின்றனர். இந்த வழக்கில் பள்ளித் தாளாளர் ரவிக்குமார் உள்பட 5 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதனிடையே, மாணவியின் இறப்பில் சந்தேகமிருப்பதாக அவரது பெற்றோர் சட்டப் போராட்டம் மேற்கொண்டனர். இதனால், மாணவியின் உடல் இரண்டு முறை உடல்கூறாய்வு செய்யப்பட்டது. மூன்றாவது முறை உடல்கூறாய்வு செய்ய பெற்றோர் தரப்பில் நீதிமன்றத்தில் வலியுறுத்தப்பட்டது.

ஆனால், இதற்கு மறுப்புத் தெரிவித்த சென்னை உயர் நீதிமன்றம், மாணவியின் இரண்டு உடல்கூறாய்வு முடிவுகளையும் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனை மருத்துவக் குழு ஆய்வு செய்ய உத்தரவிட்டது.

ஜிப்மர் ஆய்வறிக்கை தாக்கல்: புதுச்சேரி ஜிப்மர் மருத்துவக் குழுவினர் மாணவி ஸ்ரீமதியின் உடல்கூறாய்வு முடிவுகளை ஆய்வு செய்யும் பணியை அண்மையில் முடித்தனர்.

இதையடுத்து, இந்த ஆய்வு முடிவுகளை விழுப்புரம் தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் நீதிபதி புஷ்பராணி முன்னிலையில் திங்கள்கிழமை தாக்கல் செய்தனர்.

2 மாணவிகள் வாக்குமூலம்: மாணவி ஸ்ரீமதி உயிரிழந்த வழக்கில் அவரின் நெருங்கிய தோழிகளான சிலரை சிபிசிஐடி போலீஸார் ரகசியமாக விசாரித்தனர்.

ஸ்ரீமதியின் தோழிகள் இருவர் விழுப்புரம் மாவட்ட தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் திங்கள்கிழமை வாக்குமூலம் அளித்தனர். நீதிமன்ற கதவுகள் அடைக்கப்பட்ட நிலையில் சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக அவர்கள் வாக்குமூலம் அளித்தனர். இதை நீதிபதி புஷ்பராணி பதிவு செய்துகொண்டார்.

மேலும் 4 பேர் சிறையிலடைப்பு: மாணவி ஸ்ரீமதி உயிரிழப்புக்கு நீதி கேட்டு கனியார்மூர் தனியார் பள்ளி முன் கடந்த மாதம் 17-ஆம் தேதி நடைபெற்ற போராட்டம் வன்முறையாக மாறியது. இதில் தொடர்புடையதாக கடலூர் மாவட்டம், வேப்பூர் வட்டம், நல்லூர் நகரைச் சேர்ந்த சுப்பிரமணியன் மகன் அசோக்குமார் (27), கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம், பைத்தந்துறை கிராமத்தைச் சேர்ந்த பெத்துராஜ் மகன் ராம்குமார் (37), தென்செட்டியந்தல் கிராமத்தைச் சேர்ந்த செல்வராஜ் மகன் விஜயராஜ் (23) ஆகியோரை சிறப்பு புலனாய்வுக் குழுவினர் கைது செய்தனர்.

இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய சின்னசேலம் வட்டம், பங்காரம் கிராமத்தைச் சேர்ந்த ஜோதிவேல் மகன் ஜெயவேல் கள்ளக்குறிச்சி குற்றவியல் நீதிமன்றத்தில் நீதிபதி முகமதுஅலி முன்னிலையில் சரணடைந்தார்.

இவர்கள் 4 பேரும் கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். வன்முறை வழக்கு தொடர்பாக இதுவரை 300-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அர்ச்சகர் பயிற்சி உள்பட 9 பள்ளிகளில் மாணவர் சேர்க்கை

முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கிவைத்தார்

அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள் உட்பட 9 பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கைக்கான உத்தரவுகளை வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, இந்து சமய அறநிலையத் துறைச் செயலாளர் பி.சந்தரமோகன், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன்.

சென்னை, ஆக. 22: தமிழகத்தில் மேம்படுத்தப்பட்ட 6 அர்ச்சகர் பள்ளிகள் உள்பட 9 பயிற்சிப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கையை முதல்வர் மு.க.ஸ்டாலின் திங்கள்கிழமை காணொலி வாயிலாக தொடக்கி வைத்தார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழ்நாட்டில் உள்ள ஆறு அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள் ரூ.1.50 கோடி மதிப்பில் மேம்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, சென்னை (வைணவம்),திருவண்ணாமலை(சைவம்), மதுரை (சைவம்), திருச்செந்தூர் (சைவம்), பழனி (சைவம்), ஸ்ரீரங்கம் (வைணவம்) ஆகிய இடங்களில் உள்ள அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பள்ளிகளில் 151 மாணவர்கள் சேர்க்கப்படவுள்ளனர். இதற்கான சேர்க்கை அனுமதிகளை தலைமைச் செயலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

மேலும், சமயபுரம் மாரியம்மன் கோயில் ஓதுவார் பயிற்சிப் பள்ளி, கும்பகோணம் நாகநாதசுவாமி கோயில் சார்பில் தவில் மற்றும் நாதஸ்வர பயிற்சிப் பள்ளி, ஸ்ரீவில்லிபுத்தூர் நாச்சியார் கோயில் சார்பில் திவ்ய பிரபந்தப் பாடசாலை ஆகிய பயிற்சிப் பள்ளிகளில் 46 மாணவர்கள் சேர்க்கப்படவுள்ளனர்.

அவர்களுக்கான சேர்க்கை அனுமதி உத்தரவுகளையும் முதல்வர் அளித்தார்.

பயிற்சி பெறும் ஒவ்வொரு மாணவர்களுக்கும் மாதம் ரூ.3 ஆயிரம் வீதம் உதவித் தொகையாக வழங்கப்படும் என்று அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிகழ்வில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, இந்து சமய அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் பி.சந்தரமோகன், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

எடப்பாடி பழனிசாமி மேல்முறையீடு: உயர்நீதிமன்றம் இன்று விசாரணை

சென்னை, ஆக. 22: அதிமுக பொதுக் குழு கூட்டம் செல்லாது என்ற தனி நீதிபதியின் உத்தரவை எதிர்த்து எடப்பாடி பழனிசாமி தரப்பில் தாக்கல் செய்துள்ள மேல்முறையீட்டுவழக்குஉயர்நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

அதிமுக பொதுக்குழுவை எதிர்த்து முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், அதிமுக பொதுக்குழு உறுப்பினர் வைரமுத்து ஆகியோர் தாக்கல் செய்த மனுக்களை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஜெயச்சந்திரன்,'கடந்த ஜூலை 11-ஆம் தேதி நடைபெற்ற அதிமுக பொதுக் குழு செல்லாது.

அதிமுகவில் கடந்த ஜூன் 23-ஆம் தேதிக்கு முன்பு இருந்த நிலையே நீடிக்க வேண்டும்' என்று தீர்ப்பளித்தார். இந்தத் தீர்ப்பை எதிர்த்து எடப்பாடி பழனிசாமி தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

தனி நீதிபதியின் உத்தரவை எதிர்த்து தொடரப்பட்டுள்ள மேல்முறையீட்டு வழக்கை, தனி நீதிபதியின் சான்றளிக்கப்பட்ட உத்தரவு நகல் இல்லாமல் விசாரணைக்குப் பட்டியலிட வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த கூடுதல் மனுக்கள் நீதிபதிகள் எம்.துரைசாமி, சுந்தர் மோகன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள், தனி நீதிபதியின் சான்றளிக்கப்பட்ட உத்தரவு நகல் இல்லாமல் விசாரணைக்குப் பட்டியலிட உத்தரவிட்டனர். அப்போது எடப்பாடி பழனிசாமி தரப்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் விஜய் நாராயண், 'இதே போன்று, அதிமுக பொதுக் குழு உறுப்பினர் வைரமுத்து தாக்கல் செய்துள்ள இரண்டு வழக்குகளை எதிர்த்து தொடரப்பட்டுள்ள இரண்டு மேல்முறையீட்டு வழக்குகளையும் இதே போல் சான்றளிக்கப்பட்ட நகல் இல்லாமல் விசாரணைக்கு பட்டியலிட உத்தரவிட வேண்டும்' என்று முறையிட்டார்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், இந்த மேல் முறையீட்டு வழக்குகள் எண்ணிடும் நடைமுறைகள் திங்கள்கிழமை முடிவுற்றதால், அனைத்து வழக்குகளையும் செவ்வாய்க்கிழமை (ஆக.23) விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக தெரிவித்தனர்.

சுவாதீன அறிவிப்பு DCB BANK

இதனால் அறிவிக்கப்படுவது யாதெனில், கீழே கையொப்பமிட்டுள்ள **டிசிபி பேங்க் லிமிடெட்,** கிளை அலுவலக வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர் 2002-ம் வருடத்திய பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச்சொத்துக்கள் மறுசீரமைப்பு மற்றும் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் அமலாக்கச் சட்டம் (54 ஆப் 2002) மற்றும் அச்சட்டத்தின் 13 (2) பிரிவின் கீழும், 2002-ம் வருடத்திய செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் (அமலாக்கம்) சட்டத்தின் 3-வது விதிமுறைகளுக்கு ஏற்பவும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் இணை கடன்தாரர்கள் ஆகியோருக்கு அனுப்பப்பட்ட 13 (2) பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட கோரிக்கை அறிவிப்பு தேதியின்படி கீழே குறிப்பிடப்பட்ட கடன் தொகையுடன் கூடுதல் வட்டி மற்றும் இதர செலவுகள் சேர்ந்த தொகையை டிமாண்ட் நோட்டீசை பெற்ற 60 தினங்களுக்குள் திருப்பி செலுத்துமாறு கேட்டு கொண்டிருந்தார்கள். கடன்தாரர்கள் மற்றும் இணை கடன்தாரர்கள் நோட்டீசில் குறிப்பிட்டபடி கடன் தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் மேற்சொன்ன சட்டத்தின் 13 (4) -வது பிரிவு மற்றும் மேற்சொன்ன சட்ட விதிமுறைகளின் 8-வது விதிமுறைகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர் தனக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தின்படி, கீழே குறிப்பிடப்பட்ட சொத்தை தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார் என்பது கடன்தாரருக்கும், உத்தரவாததாரர்களுக்கும் குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்(கள்) & இணை கடன்தாரர்(கள்) பெயர் மற்றும் முகவரி : திரு. சரேஷ்குமார் P, திருமதி. உமாமகேஸ்வரி S, திருமதி. செந்தூர்கனி P ஆகியோரது முகவரி பழைய எண். 41 புதிய எண். 122, நாட்டு முத்து நாயக்கன் தெரு, வெஸ்ட்காட் ரோடு, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.

கடன் கணக்கு எண் :	கோரிக்கை அறிவிப்பு தேதி:	சுவாதீன தேதி :
HHOMCHE00038124	09-11-2018	16-08-2022

அடமான சொத்துக்கள் பற்றிய விவரம் : மத்திய சென்னை பதிவு மாவட்டம், மத்திய சென்னை இணை I சார் பதிவு மாவட்டம், கதவு எண்.34, முன்பு பழைய எண்.41, புதிய எண்.122, நாட்டு முத்து நாய்க்கன் தெரு, வன்னிய தேனாம்பேட்டை, சென்னை-600018 தரைத் தளம் (தெற்குப் பகுதி) 775 சதுர அடி, மற்றும் 2வது தளம் (தெற்குப் பகுதி) 775 சதுர அடி, அனைத்தி ம் 1/3 பங்கு பிரிக்கப்படாத பங்கு மற்றும் 1819 சதுர அடி நிலம் (பட்டாபடி 1870 சதுர அடி) R.S. எண்.1439A (பட்டாவின் படி ஆர்.எஸ்.எண்.1439/1), எல்லைகள் : கிழக்கே: R.S. எண்.1440/1 , மேற்கே: R.S. எண்.1438, வடக்கே: R.S. எண்.1432/5 மற்றும் தெற்கே: R.S. எண்.1439/2

நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த நிலுவைத் தொகை: ரூ.26,43,043/- (ரூபாய் இருபத்தாறு இலட்சத்து நாற்பத்திமூன்றாயிரத்து நாற்பத்திமூன்று மட்டும்)

கடன்தாரருக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள சொத்தில் எந்தவித ஊலிங்ககளையோ, வில்லங்கங்களையோ மேற்கொண்டால் அதன் டிசிபி பேங்க் லிமிடெட் வங்கிக்கு வரவேண்டிய கடன் தொகை மற்றும் கூடுதல் வட்டி மற்றும் இதர செலவுகள் இறுதி மற்றும் முழு தொகை செலுத்தும் வரை சேர்ந்த தொகைக்கு ஈடாக உள்ள மேற்கண்ட சொத்தை உட்படுத்தியே செய்ததாக கருதப்படும் என்பதை அறியவும்.

இடம் : சென்னை
தேதி : 16-08-2022

டிசிபி பாங்க் லிமிடெடுக்காக
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

பொது அறிவிப்பு

செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், பரனூர் கிராமத்தில் உள்ள நிலத்தின் தற்போதைய உரிமையாளரான மெர்ச்ஸ். மஹிந்திரா வோர்ல்ட் சிட்டி டெவலப்பர்ஸ் லிமிடெட் எனும் நிறுவனம், மெர்ச்ஸ். மஹிந்திரா இன்டெக்ரேட் டவுன்ஷிப் லிமிடெட் எனும் நிறுவனத்திற்கு குத்தகை கொடுத்துள்ள அங்கீகரிக்கப்பட்ட மனை எண். 17 பகுதி அடங்கிய நிலத்தின் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 9.243 சென்ட் நிலத்தை, மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களிடமிருந்து எங்கள் கட்சிக்காரர் பரிவர்த்தனை செய்ய தீர்மானித்துள்ளார்.

எனவே இந்த சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து மீது எவருக்கேனும் (தனி நபர்கள்/ வங்கிகள்/ சங்கங்கள்/ நிதி நிறுவனங்கள்) எவ்விதமான உரிமையும், அதிகாரமும், பாத்தியமும் அதில் ஒரு கோரிக்கையும் இருந்தால் அதாவது அதில் விற்பனை, பரிமாற்றம், அடமானம், பரம்பரையாக உரிமை, தானம், பராமரிப்பு, அனுபோக பொறுப்பு, அனுபோக வாடகை ஒப்பந்தம், குத்தகை போன்றவைகள் எவரேனும் பெற்றிருந்தால் அவற்றின் உரிமை நிரூபிக்க தேவையான ஆவணங்களுடன் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் கீழ்கண்ட முகவரிக்கு அணுக வேண்டும். அவ்வாறு எவரேனும் அவர்களின் உரிமையை 15 தினங்களுக்குள் தெரிவிக்காவிட்டால் அவர்கள் தங்களுடைய உரிமையை விட்டுக் கொடுத்ததாக கருதப்பட்டு எங்களது கட்சிக்காரர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களிடமிருந்து நிலத்தை பரிவர்த்தனை செய்ய எவ்வித ஆட்சேபனையும் இல்லை என கருதப்படும்.

சொத்து விவரம்

செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், பரனூர் கிராமத்தில் அங்கீகரிக்கப்பட்ட மனை எண். 17 பகுதி அடங்கிய நிலத்தின் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 9.243 சென்ட் கீழ்வரும் அட்டவணையில் உள்ளன

சர்வே எண்கள்	விஸ்தீரணம் (ஏக்கரில்)	சர்வே எண்கள்	விஸ்தீரணம் (ஏக்கரில்)	சர்வே எண்கள்	விஸ்தீரணம் (ஏக்கரில்)	சர்வே எண்கள்	விஸ்தீரணம் (ஏக்கரில்)	சர்வே எண்கள்	விஸ்தீரணம் (ஏக்கரில்)
88/2 பகுதி	0.04	96/1 பகுதி	0.30	130/1	0.59	133/1	0.32	134/1B	0.53
89/2 பகுதி	0.09	96/2 பகுதி	0.28	130/2	0.53	133/2	0.26	134/2	0.57
90/2 பகுதி	0.08	97/1 பகுதி	0.42	131	0.52	133/3 A	0.45	143 பகுதி	0.323
91/2 பகுதி	0.09	97/2 பகுதி	0.30	132/1	1.20	133/3B	0.13		
92/2 பகுதி	0.09	98 பகுதி	0.18	132/2	0.58	133/4	0.30		
95 பகுதி	0.12	129/2 பகுதி	0.25	132/3	0.14	134/1A	0.56		

எங்களது கட்சிக்காரர் சார்பாக
பாக்ஸ் மண்டல் & அசோசியேட்ஸ், வழக்கறிஞர்கள் & வழக்குரைஞர்கள்,
எப். எம். ஹவுஸ், எண்.302, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை 600 006.
Ph: 044 - 2436 1030 & 044 - 4305 1000, p.jayaprakash@foxmandal.in

---

கடன் வசூல் தீர்ப்பாயம் III, சென்னை

6வது தளம், கூடுதல் அலுவலகக் கட்டடம், சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை-600 006.

DRC எண் 239/2013

M/s.என்கோர் அசெட் ரீகன்ஸ்டிரக்ஷன் கம்பெனி பிரைவேட் லிட். *சான்றிதழ்தாரர்*

-எதிர்-

M/s.G.P.பாலிமர் மற்றும் 4 பிறர் *சான்றிதழ்க் கடன்தாரர்*

மாற்றியமைக்கப்பட்ட கோரிக்கை அறிவிப்பு

கடன் வசூல் மற்றும் திவால் சட்டம் 1993, பிரிவுகள் 25 முதல் 28 வரை (அவ்வப்பொழுது மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கேற்ப) மற்றும் வருமான வரிச் சட்டம் 1961, இரண்டாவது அட்டவணை, விதி 2 ஆகியவற்றின் கீழான அறிவிப்பு

1. **M/s.G.P.**பாலிமர்,
   எண் 134, 135, வேளச்சேரி முதன்மைச் சாலை, சைதாப்பேட்டை, சென்னை-600 015
2. **V.**சண்முக சுந்தரம், த/பெ. K.வேலுசாமி,
   2வது சந்து, வண்ணாரப்பேட்டை, சென்னை-600 021
3. **R.**மகேஷ், த/பெ. மறைந்த K.A.ராமாச்சார்,
   எண் 10, கார்த்திகேய தெரு, நெற்குன்றம், சென்னை-600 107
   கடன் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டவர்.
4. **T.T.**சிகாமணி, த/பெ. திருப்பதி,
   சின்னம்பேடு கிராமம், பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.
5. **V.**ஜான்சிபாய், க/பெ. A.V.K.வேலுசாமி
   எண் 9, G.A சாலை, 2வது சந்து, வண்ணாரப்பேட்டை, சென்னை-600021

சென்னைக் கடன் வசூல் தீர்ப்பாயம் எண் 3-இன் மாண்பமை தலைமை அலுவலரால் வங்கி மற்றும் நிதி நிறுவனக் கடன் வசூல் சட்டம் 1993, பிரிவு 19, உட்பிரிவுகள் 7 & 22 (சட்டம் 51/1993) ஆகியவற்றின் கீழ் 14.07.2022 நாளிட்டதும் M.A எண் 54/2019 கொண்டதுமான உத்தரவின்படி 21.11.2013 அன்று வெளியிடப்பட்ட வசூல் சான்றிதழுக்கான (O.A எண் 55/2013 கீழான DRC எண் 239/2013) திருத்த அறிவிப்பாக 04.12.2013 நாளிட்ட முந்தைய கோரிக்கை அறிவிப்பிலான பகுதியளவு மாற்றம் குறித்து இந்தக் கோரிக்கை அறிவிப்பு வெளியிடப்படுகிறது. 04.12.2013 நாளிட்ட கோரிக்கை அறிவிப்பின் இதர பகுதிகளில் எந்த மாற்றமும் இல்லை.

மேற்கூறிய சான்றிதழ்க் கடன்தாரர்கள் எண் 1, 2, 5 ஆகியோருக்கு அனுப்பப்பட்ட 26.07.2022 நாளிட்ட முந்தைய கோரிக்கை அறிவிப்பு "சார்பு செய்யப்படாமல்" திரும்பி வந்து விட்டதன் நாளிதழ் வாயிலாக இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது. வழக்கின் அடுத்த விசாரணை 08.09.2022 அன்று முற்பகல் 11:30 மணிக்கு எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கீழே எனது கையொப்பம் மற்றும் தீர்ப்பாயத்தின் முத்திரை 22ஆம் நாள் ஆகஸ்டு 2022 அன்று இடப்பட்டன.

(ரமேஷ் மன்னார்)
வசூல் அலுவலர்

தெற்கு ரயில்வே

சேலம் கோட்டம்

சேலம் கோட்டத்தில் மின்னணு ஏலம்

இந்திய குடியரசுத் தலைவரின் சார்பிலும் அவருக்காகவும், கோட்ட ரயில்வே மேலாளர் (வர்த்தகம்), சேலம் கோட்டம், தெற்கு ரயில்வே, சேலம் - 636 005 அவர்கள் கீழ் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின்படி சேலம் கோட்டத்தில் பார்க்கிங் இடங்களை விளம்பரப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தலுக்காக மின்னணு ஏலத்தை வரவேற்கிறார்.

வ. எண்.	மின்னணு ஏல பட்டியல் எண்	இடங்களின் விவரம்	ஏலம் தொடங்கும் தேதி & நேரம்
1	SA-VPS-07-2022	வாகன நிறுத்துமிடத்தை நிர்வகிப்பதற்கு 10 இடங்கள்	29.08.2022 அன்று 10.30 மணிக்கு
2	SA-VPS-08-2022	வாகன நிறுத்துமிடத்தை நிர்வகிப்பதற்கு 10 இடங்கள்	30.08.2022 அன்று 10.30 மணிக்கு
3	SA-VPS-09-2022	வாகன நிறுத்துமிடத்தை நிர்வகிப்பதற்கு 10 இடங்கள்	01.09.2022 அன்று 10.30 மணிக்கு
4	SA-PUB-MOB-03	நடமாடும் சொத்துக்களில் (வெளிப்புறம்/உட்புறம்) விளம்பரப்படுத்துதலுக்கு 11 இடங்கள்	02.09.2022 அன்று 11.00 மணிக்கு
5	SA-PUB-OSN-1708	நிலையங்களுக்குள் டிஜிட்டல் அல்லாத விளம்பரங்களுக்கு 25 இடங்கள்	05.09.2022 அன்று 10.00 மணிக்கு
6	SA-VPS-10-2022	வாகன நிறுத்துமிடத்தை நிர்வகிப்பதற்கு 16 இடங்கள்	06.09.2022 அன்று 10.00 மணிக்கு
7	SA-PUB-OSN-1808	நிலையங்களுக்குள் டிஜிட்டல் அல்லாத விளம்பரங்களுக்கு 30 இடங்கள்	06.09.2022 அன்று 11.00 மணிக்கு
8	SA-VPS-11-2022	வாகன நிறுத்துமிடத்தை நிர்வகிப்பதற்கு 15 இடங்கள்	07.09.2022 அன்று 10.00 மணிக்கு
9	SA-VPS-12-2022	வாகன நிறுத்துமிடத்தை நிர்வகிப்பதற்கு 22 இடங்கள்	09.09.2022 அன்று 10.00 மணிக்கு

அனைத்து பிற விவரங்களுக்கு **www.ireps.gov.in** இணையதளத்தில் **'E-AUCTIONS LEASING'** அமைப்பில் பார்வையிடவும்.

விசாரணைகள்/விளக்கங்கள், ஏதேனும் இருப்பின், கோட்ட ரயில்வே மேலாளர் (வர்த்தகம்), சேலம் கோட்டம், தெற்கு ரயில்வே, சேலம் - 636 005 அவர்களின் அலுவலகத்தை எந்த வேலை நாளிலும் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி எண். 0427-2431010.

கோட்ட ரயில்வே மேலாளர் (வர்த்தகம்), சேலம் - 636 005.

எங்களை பின்தொடரவும் : twitter.com/GMSRailway

IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட்

IDFC FIRST Bank

(முந்தைய கேபிட்டல் ஃபர்ஸ்ட் லிமிடெட்,
பிறகு IDFC பேங்க் லிமிடெட் உடன் இணைக்கப்பட்டது)
CIN – L65110TN2014PLC097792
பதிவு அலுவலகம் - KRM டவர்ஸ், 8 வது தளம், ஹாரிங்டன் சாலை, சேத்துபட்டு,
சென்னை-600 031 தொலைபேசி - +91 44 4564 4000 / தொலைநகல் - +91 44 4564 4022

பிற்சேர்க்கை IV (விதி 8(1))
சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துக்காக)

இப்பவும், இதன் கீழ்க்கையொப்பமிட்ட நபர், பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 ன் கீழான, IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் (முந்தைய கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிடெட், பிறகு IDFC பேங்க் லிமிடெட் உடன் இணைக்கப்பட்டது) ன் அதிகாரப்பூர்வ அலுவலராகவும், பிரிவு 13(12) - உடன் படிக்க - 'பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 (''விதிகள்'') ன் விதி 3 ன் படியும் தனக்கு வழங்கப்பெற்ற அதிகாரத்தை செயலுறுத்தி, கடன்தாரர், கூட்டு கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களான திரு. மகாலிங்கம் K 2). திரு. M கிருஷ்ணமூர்த்தி ஆகியோருக்கு 15.04.2021 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பை வழங்கியிருந்தது, அதில் குறிப்பிட்டுள்ள 13.04.2021 ம் தேதியின் படியிலான நிலுவைத்தொகை ரூ. 18,14,137.37/- (ரூபாய். பதினெட்டு இலட்சத்து பதினான்காயிரத்து நூற்று முப்பத்து ஏழு மட்டும் பைசா முப்பத்தேழு) யை மேற்சொன்ன அறிவிப்பை பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச்செலுத்தக் கோரினார்.

கடன்தாரர்கள் அத்தொகையை திருப்பிச் செலுத்த தவறியமையால், இந்த அறிவிப்பு மூலம் கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கையொப்பமிட்ட நபர், இதன் கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்துக்களை மேற்சொன்ன சட்டம் பிரிவு 13 உட்பிரிவு (4) - உடன் படிக்க - பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள்' 2002 ன் விதி 8 ன் படி தனக்குள்ள அதிகாரத்தை செயலுறுத்தி 2022 ஆகஸ்ட் 18 ம் தேதியன்று இயற்சுவாதீனம் எடுத்துள்ளார்.

குறிப்பாக கடன்தாரர் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இச்சொத்துடன் எந்தவொரு வில்லங்கமும் ஏற்படுத்த வேண்டாம் என்று எச்சரிக்கப்படுவதுடன், அவ்வாறு ஏற்படுத்தப்படும் எந்தவிதமான வில்லங்கமும் IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் (முந்தைய கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிடெட், பிறகு IDFC பேங்க் லிமிடெட் உடன் இணைக்கப்பட்டது) க்கான கடன் பொறுப்பு ரூ. 18,14,137.37/- (ரூபாய். பதினெட்டு இலட்சத்து பதினான்காயிரத்து நூற்று முப்பத்து ஏழு மட்டும் பைசா முப்பத்தேழு) மற்றும் மேற்கொண்டு வரும் வட்டி, ஆகியவற்றுக்கு கட்டுப்பட்டது.

ஜாமீன் சொத்துக்களை மீட்க உள்ள கால அவகாசம் தொடர்பாக மேற்சொன்ன சட்டம் பிரிவு 13 உட்பிரிவு (8) ன் கீழ் கடன்தாரரின் கவனம் வரவேற்கப்படுகிறது.

அசையா சொத்துக்களின் விபரம்

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, மலையம்பாக்கம் கிராமம், சர்வே எண். 3 பகுதி & 29/1 பகுதியில் அமையப்பெற்று, லே அவுட் அங்கீகார எண். 1335/03 ன் படி அங்கீகரிக்கப்பட்டதில் உள்ள 1800 சதுர அடி பரப்பளவு கொண்ட இடத்தில் உள்ள 982.5 சதுர அடி பரப்பளவு கொண்ட இடம்., மற்றும் சென்னை – 600 123, மலயம்பாக்கம், சிதம்பரம் நகர், ப்ளாட் எண்கள். 13 & 14 ன் வடக்கு பகுதியில் உள்ள கட்டிடம் உள்ளிட்ட சொத்து மற்றும் அவற்றுடன் கூடிய இதர சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். எல்லைகளாவன : கிழக்கு - 16 அடி அகல சாலை, மேற்கு - ப்ளாட் எண்கள். 73 & 74, வடக்கு - ப்ளாட் எண். 12, தெற்கு - ஜெயபாலனுக்கு சொந்தமான ப்ளாட் எண். 13 & 14 ன் பகுதி சொத்து.

ஒப்பம்/-
அதிகாரப்பூர்வ அலுவலர்
IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட்
(முந்தைய கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிடெட்,
பிறகு IDFC பேங்க் லிமிடெட் உடன் இணைக்கப்பட்டது)

தேதி - 18.08.2022
இடம் - காஞ்சிபுரம்
கடன் கணக்கு எண். 8923596

தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிட்,

TMB

(பதிவு அலுவலகம் 57, V.E.ரோடு, தூத்துக்குடி)

போரூர் கிளை

கதவு எண்.67, பழைய எண்.63A, தரை தளம், குன்றத்தூர் பிரதான சாலை, போரூர், சென்னை-600116.

கேட்பு அறிவிப்பு

தேதி : 12.08.2022

பெறுநர்,

1. **திரு.R. சத்யபிரகாஷ் த/பெ.ராஜபாண்டியன்**
   ப்ளாட் எண்.F6, முதல் தளம், மனை எண். B, ஜெயா பிளாக், மனோஜ் ரெசிடென்சி,
   27வது தெரு, ஸ்ரீ கிருஷ்ணா நகர், மதுரவாயல், சென்னை - 600 033.
2. **திருமதி.M. சீதா க/பெ. திரு.R.சத்யபிரகாஷ்**
   ப்ளாட் எண்.F6, முதல் தளம், மனை எண். B, ஜெயா பிளாக், மனோஜ் ரெசிடென்சி,
   27வது தெரு, ஸ்ரீ கிருஷ்ணா நகர், மதுரவாயல், சென்னை - 600 033.

Dear Sir / Madam,

பொருள் : திரு.R.சத்யபிரகாஷ் அவர்கள் எங்களது போரூர் கிளையில் பெற்றுள்ள கடன் கணக்கு எண். 229700950100051 கடனுக்கான SARFAESI சட்டம் பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு.

தாங்கள் அட்டவணை A -ல் குறிப்பிட்டுள்ள விவரங்களின் படி கேட்டு கொண்டதின் பேரில் எங்களது போரூர் கிளையின் மூலமாக அந்தந்த காலத்திற்கு ஏற்ப கடன் வசதிகளை தங்களுக்கு அளித்துள்ளது. எண்.1 ஆகிய தாங்கள் மேற்குறிப்பிட்ட கடன் வசதிகளை திரும்ப செலுத்துவதற்கான உறுதிமொழியுடன் தேவையான கடன் ஆவணங்களை வங்கியிடம் அளித்து வங்கியின் பெயருக்கு அடமானம் செய்து கடன் வசதிகளை பெற்றுக் கொண்டீர்கள்.

மேலும் தங்களில் எண்.1 அவர்கள் கடனுக்கு ஈடாக அட்டவணை B - ல் விரிவாக குறிப்பிட்டுள்ள சொத்துக்களின் மூலப்பத்திரங்களை அடமானம் செய்துள்ளார்.

மேற்குறிப்பிட்டுள்ள கடன் கணக்குகளில் உள்ள கடன் தொகைகளை தாங்கள் அந்தந்த கால கட்டத்திற்கேற்ப கடனுக்கு ஈடான ஆவணங்கள் ஏற்படுத்தி கொடுத்து கடனை ஏற்றுக் கொண்டுள்ளீர்கள். மேலும் கடன் கணக்குக்கு எண்.2 ஆகிய தாங்கள் சொந்த ஜாமீன் அளித்துள்ளீர்கள். தாங்கள் கடன் தொகைக்கான அசல் மற்றும் அதற்குண்டான வட்டியுடன் திருப்பி செலுத்த தவறி விட்டதை தொடர்ந்து அந்தந்த காலத்திற்கேற்ப சொத்துக்கள் வகைப்படுத்துதல் தொடர்பான ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல் / அறிவுறுத்தலின்படி கடன் கணக்கு 22.01.2022 அன்று முதல் கடன் கணக்கு செயல்படாத கணக்காக (NPA) வகைப்படுத்தப்பட்டுள்ளது. பலமுறை வேண்டுகோள் விடுத்தும் தாங்கள் கடன்களை/நிலுவையில் உள்ள கடன்களை திரும்ப செலுத்த தவறியதுடன் புறக்கணித்தும் விட்டீர்கள்.

தங்களுக்கு SARFAESI சட்டம் பிரிவு 13(2)-ன் கீழ் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிப்பது யாதெனில் **31.07.2022** அன்று வரை உள்ள கடன் தொகையான **ரூ.29,56,070.40 (ரூபாய் இருபத்து ஒன்பது லட்சத்து ஐம்பத்து ஆறாயிரத்து எழுபது மற்றும் பைசா நாற்பது மட்டும்)** முழுவதையும் இந்த அறிவிப்பு பிரசுரமான தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்தி கடனிலிருந்து விடுவித்துக் கொள்ளுமாறு கோரப்படுகிறது. மேலும் தாங்கள் மேற்குறிப்பிட்டுள்ள கடன் தொகைக்கு, வருடத்திற்கு 7.95% கணக்கிட்டு மீதமுள்ள தொகையுடன் எதிர்கால வட்டி, தற்செயலான செலவுகள், கட்டணங்கள், பிற செலவுகள் மற்றும் கூடுதலாக 2% அபராத வட்டியுடன் சேர்த்து செலுத்த வேண்டும்.

தாங்கள் மேற்குறிப்பிட்ட தொகையை எதிர்கால வட்டி, பிற கட்டணங்கள் மற்றும் செலவுகள் சேர்த்து திரும்ப செலுத்த தவறினால் மேற்படி சட்டம் பிரிவு 13 உட்பிரிவு (4)-ன் கீழ் மற்றும் பொருந்தக்கூடிய பிற விதிகளின் படி அனைத்து அல்லது ஏதாவது விரிவாக குறிப்பிட்டுள்ள உரிமையின் படி வங்கியானது நடவடிக்கை எடுக்க உரிமை உண்டு.

மேற்குறிப்பிட்ட சட்டம், உட்பிரிவு 13(13)-கீழ் இந்த அறிவிப்பு கொடுக்கப்பட்ட பிறகு தாங்கள் குறிப்பாக கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள சொத்துக்களை விற்கவோ, குத்தகைக்கோ அல்லது வேறு ஏதேனும் வகையில் மாற்றம் செய்ய தடை செய்யப்படுகிறது மற்றும் வங்கியின் முன்னறிவிப்பின்றி எழுத்து மூலமான ஒப்புதல் பெறாமல் மாற்றம் செய்திருந்தால் அவ்விதமாற்றங்கள் வங்கியின் எந்த உரிமைகளையும் பாதிக்கப்படாது மற்றும் அந்த மாற்றம் வங்கியை கட்டுப்படுத்தாது.

சட்டம் பிரிவு 13 துணை பிரிவு 8-ன் படி கடனீட்டு சொத்துக்களை மீட்டு கொள்ளவதற்கு காலம் உள்ளது என்று கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

SARFAESI சட்டம் பிரிவு 13(8).

இந்த அறிவிப்பு வெளியாவதற்கு முன்பு கடன் அளித்தவர் நிலுவை தொகையை மற்றும் அவர்கள் மூலம் ஏற்படுத்தப்பட்ட செலவுகள் கட்டணங்கள் மற்றும் பிற செலவுகள் சேர்த்து முழு தொகையையும் கடனீட்டு சொத்துக்களை பொது ஏலம் அல்லது ஒப்பந்தப்புள்ளி வரவேற்பதின் மூலம் அல்லது பொது மக்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரியோ அல்லது குத்தகை மூலமாக தனியாருக்கு மாற்றம் செய்வதற்கு முன்னர் எந்த நேரத்திலும் கடன்தாரர் மொத்த தொகையும் செலுத்தலாம்.

1) கடனீட்டு சொத்துகளை விற்கவோ அல்லது குத்தகை ஒப்படைப்பு மாற்றம் செய்யவோ கூடாது மற்றும்
ii) கடன் அளித்தவர் இந்த உட்பிரிவின் கீழ் கடன் தொகையை செலுத்துவதற்கு முன்பு சொத்துக்களை விற்பதற்கோ அல்லது குத்தகை மூலம் மாற்றம் செய்யவோ ஏதேனும் வழிமுறைகள் செய்திருந்தால் அதன் மீது கடனீட்டு கடன்தாரர் கடனீட்டு சொத்துக்களை விற்பதற்கோ அல்லது குத்தகை மூலம் மாற்றம் செய்யவோ மேல் நடவடிக்கை எடுக்க எந்த முயற்சியும் செய்ய கூடாது.

பிற நடவடிக்கைகள் அல்லது சட்ட வழிமுறைகள் மற்றும் பிறசட்ட வழிகளின் கீழ் தேவைப்பட்டால் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுப்பதற்கு வங்கிக்கு உரிமை உண்டு என்று இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

அட்டவணை A

வ. எண்.	கடன் வசதியின் தன்மை மற்றும் கணக்கு எண்.	31.07.2022 அன்று வரை உள்ள நிலுவை தொகை	கடன் ஆவணங்கள் அளித்துள்ள தேதி/ கடைசியாக புதுப்பித்த தேதி
1.	TL – ரூ.30.00 லட்சம் A/c.No.229700950100051	ரூ.29,56,070.40	23.12.2016

அட்டவணை B (அசையா சொத்து) : திரு.R.சத்யபிரகாஷ் அவர்கள் பெயரில் உள்ள, விருகம்பாக்கம் சார் பதிவாளர் அலுவலகம், ஜெயா பிளாக், மனோஜ் ரெசிடென்சி, 27வது தெரு, ஸ்ரீ கிருஷ்ணா நகர், மதுரவாயல் கிராமம், அம்பத்தூர் தாலுகா, சென்னை - 600 053 என்ற முகவரியில் சர்வே எண். 3030/1B பகுதி-ன் படி மனை எண். B-ல் மொத்தமுள்ள 2060 சதுர அடி பரப்பளவு நிலத்தில் 456 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் முதல் தளத்தில் 710 சதுர அடியில் கட்டப்பட்டுள்ள பொது பகுதி உட்பட மற்றும் மூடிய கார் பார்க்கிங் உடன் அடுக்கு மாடி குடியிருப்பு எண். F-6, மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும்.

அங்கீகாரம் பெற்ற அதிகாரி
தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிட்.,
(போரூர் கிளைக்காக)

ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

SHRIRAM
A WINNING RELATIONSHIP

மீஞ்சூர் கிளை: எண்.69/2, ASR காம்ப்ளெக்ஸ், முதல் தளம்,
T.H. ரோடு, மீஞ்சூர்-601203

அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு

பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம் 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள், 2002 ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002)-ன்கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம், மேற்படி சட்டம் 13(12) பிரிவின் விதி 3-ன்படி **04.05.2022** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் **(Demand Notice)** குறிப்பிடப்பட்ட கடன் தொகையான **04.05.2022 அன்றுள்ளபடி ரூ.30,37,671/-** (ரூபாய் முப்பது லட்சத்து முப்பத்து ஏழாயிரத்து அறுநூற்று எழுபத்து ஒன்று மட்டும்) மற்றும் வட்டி, இதர செலவுகளுடன் அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று **கடன்தாரர் Mrs.P.புவனேஸ்வரி ஜாமீன்தாரர்கள்: Mr.வெங்கடேசன் மற்றும் Mr.R.வேணுகோபால்** ஆகியோருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.

கடன்பெற்றவர்/ஜாமீன்தாரர் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த தவறியதால் குறிப்பாக கடன்பெற்ற நபருக்கும் / ஜாமீன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால் மேற்படி சட்டம் 13(4) பிரிவின் கீழ்கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8வது விதியின் படியும் **கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை 17.08.2022 அன்று கீழே கையொப்பமிட்டவர் நிறுவனத்தின் உடமையாக்கியுள்ளார்.**

இது முதற்கொண்டு கடன் பெற்றவரோ, ஜாமீன்தாரரோ மற்றும் பொது மக்களோ இந்த சொத்தில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது **ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்-க்கு வந்து சேரவேண்டிய கடன் தொகையான 04.05.2022 அன்றுள்ளபடி ரூ.30,37,671/-** (ரூபாய் முப்பது லட்சத்து முப்பத்து ஏழாயிரத்து அறுநூற்று எழுபத்து ஒன்று மட்டும்) மற்றும் வட்டி, இதர செலவுகளுக்கும் கட்டுப்பட்டவை என்றும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்டப்பிரிவு 13(8) ஷரத்துக்களின் மீது கடன்தாரரின் கவனம் ஈர்க்கப்படுகிறது. (ஈடுபெற்ற சொத்து).

அசையா சொத்து விபரம்

Mr.வேணுகோபால் S/o.ராதாகிருஷ்ணன்-க்கு சொந்தமான சொத்து (விற்பனை பத்திர ஆவண எண்.43/2008) வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் திருவொற்றியூர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட கிராம நத்தம் பழைய சர்வே எண்.159 பகுதி, புதிய சர்வே எண்.382/6, எண்.143, அத்திப்பட்டு கிராமம், பொன்னேரி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் என்னும் முகவரியிலுள்ள 00324 சதுர மீட்டர் அதாவது 3523 சதுர அடி காலி மனை, RCC கட்டிடம் அதனுடன் E.B. இணைப்பு மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: வேணுகோபால் மனை மற்றும் பொது வழிப்பாதை, தெற்கு: காலி மனைகள் மற்றும் சர்வே எண்.178, கிழக்கு: பார்த்தசாரதி காலி மனை மற்றும் வீடு, மேற்கு: குருநாத நாயுடு காலி மனை மற்றும் வீடு.

தேதி : 17.08.2022
இடம் : சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

படிவம் G

விருப்பம் தெரிவிக்கக் கோரும் (EOI) அழைப்பு

நொடிந்த நிலை மற்றும் திவால் நிலை வாரியம் (கார்ப்போரேட் நபர்களுக்குரிய இன்சால்வன்சி தீர்வு நடைமுறைகள்) ஒழுங்கு விதிகள் 2016, ஒழுங்கு விதி 36A (1)-ன் கீழ்

முக்கிய விவரங்கள்

1	கடன் பெற்ற கார்ப்போரேட் நிறுவனம்	**Uniply Industries Limited**
2	கடன் பெற்ற கார்ப்போரேட் நிறுவனம் தொடங்கப்பட்ட தேதி	**04.09.1996**
3	கடன் பெற்ற நிறுவனம் பதிவு செய்துள்ள / இணைப்பு பெற்றுள்ள அதிகார அமைப்பு	சென்னை (ROC) கார்ப்பரேட் அமைச்சக விவகாரங்கள் கம்பெனி பதிவாளர் (ROC)
4	கார்ப்போரேட் அடையாள எண்/வரையறை உள்ள பொறுப்பு அடையாள எண்.	**L20293TN1996PLC036484**
5	கடன் பெற்ற கார்ப்போரேட் நிறுவனத்தின் பதிவு அலுவலக மற்றும் முதன்மை அலுவலக முகவரி	எண்.37, T.T.K. ரோடு, C.I.T. காலனி, ஆழ்வார்பேட்டை, சென்னை- 600 018
6	கடன் பெற்ற கார்ப்போரேட் நிறுவனத்தின் இன்சால்வன்சி தொடங்கும் தேதி	**05.10.2021** - 04-10-2021அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த உத்தரவினை அலுவல் நேரத்திற்குப் பிறகு பதிவகம், NCLT 04.10.2021 அன்று, நியமிக்கப்பட்ட IRP அவர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பியது. 05.10.2021 அன்று அது IRP யால் படிக்கப்பட்டுள்ளது.
7	விருப்பம் தெரிவிக்கக் கோரும் (EOI) அழைப்புத் தேதி	**23.08.2022**
8	சட்டம் பிரிவு 25(2)(h)-ன் கீழ் தீர்மான விண்ணப்பதாரரின் தகுதிகள்	தகுதி குறித்த விரிவான விவரங்களுக்கு **uniplyrp@pkfrevival.com** என்ற மின்னஞ்சல் மூலம் பெறலாம்
9	பிரிவு 29A-யில் தகுதியின்மை குறித்த விவரங்கள்	தகுதியின்மை குறித்த விரிவான விவரங்களுக்கு **uniplyrp@pkfrevival.com** என்ற மின்னஞ்சல் மூலம் பெறலாம்
10	விருப்பம் தெரிவிக்கும் விண்ணப்பங்கள் வந்து சேர இறுதி தேதி	**06.07.2022**
11	உத்தேச தீர்மான விண்ணப்பதாரர்களின் தற்காலிக பட்டியல் வழங்கும் தேதி	**16.07.2022**
12	தற்காலிக பட்டியலுக்கு ஆட்சேபனை சமர்ப்பிக்க இறுதி தேதி	**21.07.2022**
13	உத்தேச தீர்மான விண்ணப்பதாரர்களின் இறுதிப்பட்டியல்	**21.07.2022**
14	அறிக்கைத்தகவல் மதிப்பீடு குறித்த கணக்கீடு வழங்கும் தேதி மற்றும் உத்தேச தீர்மான விண்ணப்பதாரர்களிடம் தீர்மான திட்டங்களை கோரும் தேதி	**21.07.2022**
15	தீர்மான திட்டம், மதிப்பீடு குறித்த கணக்கீடு அறிக்கைத்தகவல் மற்றும் இதர தகவல்கள் பெறும் வழிமுறை	**uniplyrp@pkfrevival.com** என்ற மின்னஞ்சல் மூலம் பெறலாம்.
16	தீர்மான திட்டத்தினை சமர்ப்பிக்க இறுதி தேதி	**22.09.2022**
17	தீர்மான தொழில் முறையாளர்களுக்கு தீர்மான திட்டங்களை சமர்ப்பிப்பதற்கான வழிமுறை	1)மின்னஞ்சல் - uniplyrp@pkfrevival.com 2) வ.எண்.21-ல் உள்ள முகவரிக்கு கொரியர் மூலம் அனுப்பவும்
18	தீர்மான திட்டத்தினை ஒப்புதல் பெற தீர்மான அதிகாரியிடம் சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படும் தேதி	**22.10.2022**
19	தீர்மான தொழில் முறையாளர் நபர் பெயர் மற்றும் பதிவு எண்.	**L.V. ஷியாம் சுந்தர்** பதிவு எண். **IBBI/IPA-002/IP-N00262/2017-18/10775**
20	வாரியத்துடன் பதிவு செய்யப்பட்ட தீர்மான தொழில் முறையாளர் நபரின் பெயர், முகவரி மற்றும் மின்னஞ்சல் முகவரி	**முகவரி:** 3வது தளம், எண்.17, காந்தி ரோடு, ஆழ்வார்திருநகர், விநாயகர் கோயில் எதிரில் மற்றும் சம்புக்தா ஸ்கேன்ஸ் மேல்மாடியில், சென்னை 600087 **Email: shyam.ascend@gmail.com**
21	தீர்மான தொழில் முறையாளருடன் கடித பரிமாற்றத்திற்கு பயன்படுத்த வேண்டிய முகவரி & மின்னஞ்சல்	**முகவரி:** 3வது தளம், எண்.17, காந்தி ரோடு, ஆழ்வார்திருநகர், விநாயகர் கோயில் எதிரில் மற்றும் சம்புக்தா ஸ்கேன்ஸ் மேல்மாடியில், சென்னை 600087 Email: uniplyrp@pkfrevival.com with a copy marked to shyam.ascend@gmail.com Landline: 044-43535657 Mobile: 9884882326 (Office)
22	மேலும் விவரங்கள் கிடைக்குமிடம்	**uniplyrp@pkfrevival.com** என்ற மின்னஞ்சல் மூலம் பெறலாம்.
23	படிவம் G வெளியிடும் தேதி	**23.08.2022**

21 ஜூன், 2022 அன்று விருப்பத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பை தீர்மான நிபுணர் வெளியிட்டார். தீர்மானத் திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி ஆகஸ்ட் 22, 2022 ஆகும். எவ்வாறாயினும், கடன் வழங்கியவர்கள் குழு தீர்மானத் திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதியை நீட்டிக்கத் தீர்மானித்தது. எனவே இந்தியத் திவால் மற்றும் திவால்நிலை வாரியத்தின் (கார்ப்பரேட் நபர்களுக்கான திவால்நிலைத் தீர்மான நடைமுறை) விதி முறைகள், 2016-ன் விதிமுறை 36A(4A)-க்கு இணங்க, தீர்மான நிபுணர் இந்த விருப்பத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பை வெளியிடுகிறார்.

Signature of the Resolution Professional
IBBI/IPA-002/IP-N00262/2017-18/10775
3வது தளம், எண்.17, காந்தி ரோடு, ஆழ்வார்திருநகர்,
விநாயகர் கோயில் எதிரில் மற்றும் சம்புக்தா ஸ்கேன்ஸ் மேல்மாடியில்,
சென்னை, தமிழ்நாடு 600087
For Uniply Industries Limited

தேதி: 23.08.2022
இடம்: சென்னை